**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>**

**<u>OS.No. 276/2020</u>**

**<u>பி.சா. 1 – செல்வகுமார் , த/பெ. பச்சையப்ப முதலியார் என்பவரை வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

**<u>சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.</u>**

1. தாவா சொத்து காஞ்சிபுரம் கதவு எண்.75 எம் எம் அவன்யூ–யில் உள்ளது என்றால் சரிதான். அதன் அளவானது கிழக்கு மேற்கு 40 அடி, வடக்கு தெற்கு 70 அடி என்றால் சரிதான். அதில் ஆர்சிசி ரூப் ஒரு மாடி உள்ள கட்டிடம் என்றால் சரிதான். மேற்படி வீடு எனது தந்தை பச்சையப்ப முதலியாருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். எனது தந்தை டி.ஆர்.உயர்நிலை பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்து வந்தார் என்றால் சரிதான். தாவா சொத்து எனது தந்தையின் சுய சம்பாத்திய சொத்து என்றால் சரிதான். எனது தந்தை 09.06.1993ல் தாவா சொத்து சம்பந்தமாக உயில் ஆவணம் எழுதி பதிவு செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி உயில் ஆவணம் அசலை நான் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் உயில் ஆவணம் எனது தந்தை எழுதியுள்ள மேற்படி உயில் ஆவணத்தின் சான்றிட்ட நகல் என்றால் சரிதான். மேற்படி உயில் ஆவணத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. மேற்படி உயிலில் தாவா சொத்தை பொறுத்து இரண்டு குமார்கள் சரிசமமாக அடையவேண்டியது என்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி இரண்டு குமாரர்கள் யார் யார் என்றால் நான் மற்றும் எனது அண்ணன் எம்.பி.சுப்ரமணியன் இருவரும்தான். எனது அண்ணன் இறந்துவிட்டார். இவ்வழக்கின் 1ம் வாதி அருள்மொழி எனது அண்ணன் சுப்ரமணியனின் மனைவி என்றால் சரிதான். 2ம் வாதி நிவேதிதா எனது

அண்ணன் சுப்ரமணியனின் மகள் என்றால் சரிதான். எனது தந்தை கடந்த 05.10.1994ல் காலமாகிவிட்டார் என்றால் சரிதான். மேற்படி எனது தந்தை இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது தந்தை காலமானபின்னர் உயில் அமலுக்கு வந்து அதன் படியாக எனக்கும், எனது அண்ணனுக்கு தாவா சொத்து கிடைத்து என்றால் உயில் ஆவணத்தில் தாவா சொத்து எனது தாயார் பார்வதி அம்மாள் என்பவருக்கு முழுமையாக பாத்தியப்பட்டுள்ளது என்று சொல்லப்பட்டுள்ளது. அதன் படியாக தாவா சொத்து பார்வதி அம்மாளுக்கு சென்றது. எனது சகோதரர் சுப்ரமணியன் தாவா சொத்தை பொறுத்து ஆவணம் எழுதி வைத்துள்ளாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நானும், எனது சகோதரர், தாயார், சகோதரி ஆகியோர்கள் சேர்ந்து காஞ்சிபுரம் அர்பன் வங்கியில் தாவா சொத்தை அடமானம் வைத்து கடன் பெறப்பட்டுள்ளது.

3. தாவா சொத்தில் தற்போது நான் தான் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். உயில் படியாக நானும், எனது அண்ணனும் பாகம் பிரித்து கொண்டோமா என்றால் இல்லை. இது சம்பந்தமாக வழக்கு நடைபெற்று வருகிறது. தாவா சொத்து சம்பந்தமாக வாதிகள் அ.வ.எண்.3/2005 என்ற வழக்கினை சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரத்தில் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான். மேற்படி வழக்கானது என்மீது, எனது தாயார், எனது சகோதரி மீது தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் 1/3 பாகம் கோரி தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் பாகம் தவிர்த்து தாவா சொத்தினை பொறுத்து வில்லங்கம் செய்யகூடாது என்று தடை உத்தரவு கோரப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வழக்கு 29.07.2010ல் தீர்ப்பானது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ1 ஆனது மேற்படி

அ.வ.எண்,3/2025 வழக்கின் முதல்நிலை தீர்ப்பாணை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ2 ஆனது மேற்படி அ.வ.எண்.3/2025 வழக்கின் தீர்ப்புரை என்றால் சரிதான். மேற்படி வழக்கில் தாவா சொத்து உயில் சம்பந்தமாக தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் முதல் நிலை தீர்ப்பாணைக்கு பின்னர் இறுதிநிலை தீர்ப்பாணை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் I.A.No.212/2014 மனுதான் இறுதிநிலை தீர்ப்பாணை மனு என்றால் சரிதான். மேற்படி மனுவானது நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். முதல்நிலை தீர்ப்பாணைக்கு எதிராக மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேல்முறையீடு எண் 11/2018 காஞ்சிபுரம், முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. வாதிகள் தரப்பில் மற்றொரு மேல்முறையீடு எண்.19/2018 மேற்படி நீதிமன்றத்தில் Means Profits கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இரண்டு மேல்முறையீடு வழக்குகளும் தற்போது நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். எனது தாயார் பார்வதி அம்மாள் 30.11.2017 தேதியில் எனக்கு தானசெட்டில்மென்ட் ஆவணம் தாவா சொத்தை பொறுத்து அ.வ.எண்.3/2005 வழக்கின் தீர்ப்பிற்கு பின்னர் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.4 தானசெட்டில்மென்ட் ஆவணம்தான் எனது தாயார் எனக்கு எழுதி கொடுத்தது என்றால் சரிதான்.

வழக்கறிஞர் வேண்டுக்கோளின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typo graphed  to the witness and acknowledged by him / her to be correct.

Sd. A. Mohamed Ali
Additional Subordinate Judge,
Kancheepuram